[1979 மார்ச் 19

குன்னூர் அரசு மருத்துவமனை

* வினா எண் 475—திரு. க. அரங்கசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குன்னூர் அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே பிரிவு ஒன்று துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். சௌந்திரராஜன் : குன்னூர் அரசினர் மருத்துவமனையில் ஒரு 100 எம். ஏ, எக்ஸ்ரே கருவி ஏற்கனவே பொருத்தப்பட்டு இயங்கி வருகிறது,

திரு. க. அரங்கசாமி: அங்கு எக்ஸ்ரே கருவி அமைக்கப்பட்டிருந்தாலும் இன்றுவரை அது சரிவர இயங்கவில்லை என்பதை அரசு அறியுமா? அதைச் சரிவர இயக்கும் முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : 1-1-78 முதல் 29-11-78 வரை 3107 எக்ஸ்ரே படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு மாதத்திற்கு சராசரி 259 படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இதிலிருந்து அந்த இயந்திரம் சரியாக இயங்குவதாகத்தான் தெரிகிறது.

திரு. க. அரங்கசாமி : கடந்த மாதம் நானே அந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நேரத்தில் எக்ஸ்ரே படம் எடுக்கவேண்டுமென்று அழைத்துச் சென்று வோல்ட்டேஜ் குறைவாக இருக்கிறது என்று காரணம் சொல்லி எடுக்கவில்லை. இதுபோன்ற குறைகளை நிவர்த்தி செய்ய அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : வோல்டேஜ் குறைவது என்பது எல்லா இடத்திலும் மின்சாரத்தில் ஏற்படுகிற கோளாறுதான்; அது அந்த இயந்திரத்தின் கோளாறு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குலசேகரன்பட்டினத்தில் கால்நடை மருத்துவமனை:

* வினா எண் 476—திரு. இரா. அமிர்தராஜ் ; மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், குலசேகரன்பட்டினத்தில் கால்நடை மருத்துவமனை நிறுவும் குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறுவப்படும்?